செ.வெ.எண்: 33/ ஜுலை / 2021 நாள்:09.07.2021

# செய்திக் குறிப்பு

## திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான காப்பீடுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப. அவர்கள் வேண்டுகோள்

-----------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம், மானியத்துடன் கூடிய கால்நடை காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. அதில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 4,800 கால்நடைகளுக்கு காப்பீடு செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் அதிகபட்சமாக 35 ஆயிரம் ரூபாய் வரை மானியத்துடன் காப்பீடு செய்து கொள்ளலாம். வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு 50 சதவீத மானியத்திலும், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினருக்கு 70 சதவீத மானியத்திலும், காப்பீடு செய்யப்படும். அதிகபட்சமாக ஒரு குடும்பத்துக்கு ஐந்து (பசு மற்றும் எருமை) மாடுகளுக்கு காப்பீடு செய்து கொள்ளலாம்.

இத்திட்டத்தில், இரண்டரை முதல் எட்டு வயதுடைய பசு மற்றும் எருமைகளுக்கு காப்பீடு செய்து கொள்ளலாம். கால்நடைகளுக்கு காப்பீடு செய்ய விரும்பும் கால்நடை வளர்ப்போர், அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அணுகிப் பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**